10.02.2020, S.T.C.No. 03 /2018
பு.த.சா.1 திரு.பால்ச்சாமி, த/பெ.ராமு
எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை -

எதிரி உங்களுக்கு எத்தனை வருடங்களாக பழக்கம் என்றால் 10 வருடங்களாக தெரியும். அவருடைய குடும்பத்தினர் 50 வருடங்களாக தெரியும். எதிரியின் தாத்தா பெயர் நடராஜன். தகப்பனார் பெயர் சண்முகசுந்தரம். நான் கொத்தனார் வேலை செய்கிறேன். எதிரிக்கு பணம் கொடுத்ததாக கூறும் காலத்தில் ஒரு நாளைக்கு ரூ.750/- பெற்றேன். நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பில் 29.06.2017ல் எதிரி என்னிடம் பணம் கேட்டதாக சொல்லியுள்ளேன். நான் அந்த காலகட்டத்தில் வங்கியில் பணம் போட்டு வைத்திருந்தேனா என்றால் இல்லை. வீடு கட்டுவதற்காக பணம் சேர்த்து வைத்திருந்தேன். வீடு கட்டுவதற்காக பணம் வைத்திருந்ததாக வழக்கறிஞர் அறிவிப்பிலோ, புகாரிலோ சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. நிரூபண வாக்குமூலத்தில் பணம் ஏற்பாடு செய்து கொடுத்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எவ்வாறு ஏற்பாடு செய்ததாக சொல்லப்படவில்லை என்றால் சரிதான். ரூ.20,000/- திற்கு மேல் பண பரிமாற்றங்கள் செய்தால் வங்கியின் மூலமாகத்தான் கொடுக்கவேண்டும் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. ரொக்கமாக ரூ.20,000/- மேல் கொடுத்தால் அது தடை செய்யப்பட்ட பரிவர்த்தனை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த காசோலையானது சிட்டி யூனியன் வங்கிக்கு வசூலுக்கு செல்லவில்லை என்றால் சரியல்ல. எதிரி எனக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பில் என்னை யாரென்று தெரியாது என்றும், காசோலை கொடுத்ததில்லை என்றும், காசோலையில் உள்ள கையெழுத்தும் தன்னுடையதல்ல என மறுத்துள்ளாரா என்றால் மறுத்துள்ளார். அதில் மேற்படி விபரம் சொல்லி மாவட்ட காவல் கண்காணிப்பாளருக்கும், குற்றப்பிரிவு துணைகண்காணிப்பாளருக்கும், கேணிக்கரை காவல்நிலையத்திற்கும் புகார் அனுப்பி உள்ளதாக தன்னுடைய வழக்கறிஞர் பதில் அறிவிப்பில் சொல்லியுள்ளரா என்றால் சொல்லியுள்ளார். காசோலையில் கண்ட கையெழுத்தும், வழக்கறிஞர் பதில் அறிவிப்பில் உள்ள கையெழுத்தும் வெவ்வேறு உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எதிரி குடியிருந்த வீட்டிற்கு மாடியில் வழக்கறிஞர் திரு.பாலகிருஷ்ணன் என்ற எனது உறவினர் குடியிருந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. திரு.பாலகிருஷ்ணன் என்பவருக்கு நான் தான் வீடு கட்டி கொடுத்தேன் என்றால் இல்லை. அதற்காக தரவேண்டிய பாக்கி பணத்திற்காக எதிரியுடைய காசோலையை மோசடியாக எடுத்து என்னிடம் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. வழக்கறிஞர் பதில் அறிவிப்பிலும் மேற்படி விபரங்களை சொல்லி தான் எனக்கு அனுப்பியுள்ளார் என்றால் அனுப்பியுள்ளார். மேற்படி பதில் அறிவிப்பிற்கு மறுப்பு தெரிவித்து நான் திரும்பவும் அறிவிப்பு அனுப்பினேனா

என்றால் இல்லை. நான் பணத்தை கொடுத்ததாக கூறும் சமயத்தில் எதிரிக்கு ரூ.3,10,000/- கொடுக்கும் அளவிற்கு வசதி வாய்ப்புகள் கிடையாது என்றால் சரியல்ல. எதிரிக்கு ரூ.3,10,000/- கொடுத்ததற்காக வேறு ஏதேனும் கணக்கு வழக்குகள் வைத்துள்ளேனா என்றால் இல்லை. எதிரிக்கு நான் எந்தவித பணமும் கொடுக்கவில்லை என்றாலும், எதிரியின் காசோலையை தவறாக பயன்படுத்தி போலியாக கையொப்பம் இட்டு இந்த வழக்கை எதிரியின் மீது பொய்யாக கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் புகாரில் சொல்லியது போல் மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138ன் கீழ் எந்தவித குற்றமும் புரியவில்லை என்றால் சரியல்ல. நான் தான் எதிரியின் காசோலையை தவறுதலாக பயன்படுத்தி இந்த வழக்கை பொய்யாக கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரியின் கையெழுத்தை, காசோலையை கையெழுத்துடன் ஒப்பீடு செய்ய தடய அறிவியல் நிபுணர் கருத்துரைக்கு அனுப்ப ஆட்சேபணை உண்டா என்றால் சட்டத்திற்குட்பட்டு அனுப்ப ஆட்சேபணை இல்லை. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை - இல்லை.

(ஒப்பம்.ஜெ.ஜெனிதா)
நீதித்துறை நடுவர் எண்.1,
இராமநாதபுரம்.